## திராவிட மாடல் ஆட்சி

# சென்னையில் அரைநூற்றாண்டு வளர்ச்சியை 5 ஆண்டுகளில் சாதித்துக் காட்டியுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!









சென்னை, மார்ச் 15-

திராவிட மாடல் ஆட்சி, சென்னையில் அரை நூற்றாண்டு வளர்ச்சியை 5 ஆண்டுகளில் சாதித்துக் காட்டியுள்ளது எனறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பக்கத்தில் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

**பாலங்கள் – 36 (முடிவுற்றவை 19, நடைபெறுபவை 17) பூங்காக்கள் மேம்பாடு – 236 பணிகள் மழைநீர் வடிகால்கள் – 1,442 கிலோமீட்டர் பள்ளிகள் மேம்பாடு – ரூ. 533 கோடி குடிநீர்த் திட்டப் பயன்பாடுகள் – ரூ. 5,447 கோடி சாலைகள் மேம்பாடு – 3,455 கிலோமீட்டர் வடசென்னை வளர்ச்சித் திட்டம் சுமார் 7,000 கோடி ரூபாய் இவை தவிர, பல்வேறு முதல்வர் படைப்பகங்கள், விளையாட்டு அரங்கங்கள், விளையாட்டுத் திடல்கள், நவீன வசதிகளுடன் கூடிய திருமண மாளிகைகள், புத்தம்புதிய வடிவமைப்பிலான பேருந்து நிலையங்கள், தாழ்தள மின் பேருந்துகள் எனச் சென்னையின் தோற்றம் ஏற்றம் பெற்றிருக்கிறது! இன்னும் செய்வோம், உலகத்தர உட்கட்டமைப்புடன் எழில்மிகு சென்னையாக 2030இல் வளர்த்தெடுப்போம்!**

#SingaraChennai 2.0 loading in #DravidianModel 2.0!

**வெல்வோம் ஒன்றாக**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதன் அடிமை கூட்டணி கட்சிகளையும் கண்டித்து

# விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், மார்ச் 15 -

கழகத் தலைவர் - முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வெளியுறவு கொள்கையாலும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும், ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதன் அடிமை கூட்டணி கட்சிகளையும் கண்டித்து இன்று (15.03.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணிக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க்காணும் இடங்களில் நடைபெறுகிறது.

திருவெண்ணெய்நல்லூர் மேற்கு, திருவெண்ணெய் நல்லூர் மத்திய, திருவெண்ணெய்நல்லூர் பேரூர் ஆகிய ஒன்றியங்கள் திருவெண்ணெய் நல்லூர் இந்தியன் வங்கி எதிரிலும், திருக்கோவிலூர் நகரம், திருக்கோவிலூர் கிழக்கு, திருக்கோவிலூர் மத்திய ஆகிய ஒன்றியங்கள் திருக்கோவிலூர் பழைய பேருந்து நிலையம் அருகிலும், மணம்பூண்டி, முகையூர் வடக்கு, முகையூர் தெற்கு, அரகண்டநல்லூர் பேரூர் ஆகிய ஒன்றியங்கள் அரகண்டநல்லூர் BSNL அலுவலகம் எதிரிலும், காணை தெற்கு, காணை வடக்கு, காணை மத்திய, கோலியனூர் மேற்கு ஒன்றியங்கள் அதனூர் கனரா வங்கி அருகிலும், விக்கிரவாண்டி கிழக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய, விக்கிரவாண்டி வடக்கு, விக்கிரவாண்டி பேரூராட்சி ஆகிய ஒன்றியங்கள் நேமூர் இந்தியன் வங்கி அருகில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறப்பாக வழங்கியதற்காக

# நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க முதல்வர் ஆணை!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தகவல் !



சென்னை, மார்ச் 15-

பொங்கல் பரிசு தொகுப்பினை சிறப்பாக வழங்கியதற்காக நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கான ஊக்கத் தொகையினை ரூ.3.00 ஆக உயர்த்தி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் - என கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, சாதனை புரிந்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற மக்கள் நலம் சார்ந்த திட்டங்கள் அனைத்தையும் மக்களிடத்திலே முழுவதுமாக கொண்டு சேர்க்கும் ஒரு பாலமாக கூட்டுறவுத் துறை விளங்கி வருகிறது.

அந்த வகையில், 2026-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு ஆகியவற்றுடன் 3000/ ரொக்கத் தொகை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதன்படி, 08.01.2026 முதல் 24.01.2026 வரை நியாயவிலைக்கடைப் பணியாளர்களால் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு சிறப்பாக வழங்கப்பட்டது. பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறந்த முறையில் வழங்கியதற்காக நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கு கூடுதல் பணிச் சுமையை ஈடுசெய்யும் விதமாக கடந்த காலங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.0.50 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், நியாய விலைக் கடைப் பணியாளர்கள் மேற்படி திட்டத்தை எவ்வித புகாருக்கும் இடமின்றி, செவ்வனே செயல்படுத்தியதாகவும் அவ்வகையில் நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.3/ என்ற வகையில் ஊக்கத் தொகை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டார்கள்.

நியாய விலைக்கடை பணியாளர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறந்த முறையில் வழங்கியதற்காக, நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.3/வீதம் வழங்க ஆணையிட்டுள்ளார்.

மேலும் இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.6,47,43,054/ (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்து எழு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து ஐம்பத்து நான்கு மட்டும்)ஐ வழங்க நிருவாக அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் நியாய விலைக்கடை பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி உள்ளார்கள் கூட்டுறவு துறையின் சார்பிலும், நியாய விலைக் கடை பணியாளர்கள் சார்பிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நியாய விலை கடை பணியாளர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

---

## பதிவுத்துறை சார்பில் ஆவண எழுத்தர் நல நிதியத்தின் மூலம்

# 22 பேருக்கு குடும்ப நல உதவித் தொகை!

## அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்!

சென்னை, மார்ச் 15 -

பதிவுத்துறை சார்பில் ஆவண எழுத்தர் நல நிதியத்தின் மூலம் 22 பயனாளிகளுக்கு குடும்ப நல உதவித் தொகைக்கான ஆணைகள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களால் வழங்கப்பட்டது.

2021 - 2022ஆம் நிதியாண்டின் பதிவுத்துறை மானிய கோரிக்கையின் போது பதிவுத்துறையைச் சார்ந்து பணிபுரியும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக, ஆவண எழுத்தர் நல நிதியம் முழுவதுமாக செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியச் சட்டம் 2022 இயற்றப்பட்டு, 02.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்களால் பதிவுத்துறை சார்பில் தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நல நிதியம் தொடங்கி வைக்கும் விதமாக இந்நிதியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த 5 ஆவண எழுத்தர்களுக்கு உறுப்பினர் அட்டை (Membership Card) வழங்கப்பட்டு நிதியத்தின் செயல்பாடுகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிதியத்தில் இது வரையில் 3108 ஆவண எழுத்தர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். அவர்களில் முதற்கட்டமாக நேற்று முன்தினம் (13.3.2026) சென்னை ராஜாஜி சாலையில் உள்ள பதிவுத்துறை அலுவலக வளாக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 22 உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கு குடும்ப நல உதவித் தொகைக்கான ஆணைகள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத் துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், பதிவுத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் ஆவண எழுத்தர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## மூத்த பத்திரிகையாளர்கள் நலச்சங்கச் செயலாளர் ஆர்.ரெங்கராஜன் அறிக்கை!

சென்னை, மார்ச் 15 -

பத்திரிகையாளர்களுக்கு குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மூத்த பத்திரிகையாளர்கள் நலச்சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இச்சங்கத்தின் தேசிய செயலாளர் ஆர். ரெங்கராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மூத்த பத்திரிகையாளர்கள் நலச்சங்கம், தமிழ் நாடு (affiliated to allIndia body Senior Journalists Federation of India) வழங்கிய கோரிக்கை மனுவினை ஏற்று பல சலுகைகளை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனைத்து பத்திரிகையாளர்களின் சார்பில் எங்கள் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

சென்ற மாதம் இந்த கோரிக்கை மனுவை மூத்த பத்திரிகையாளர்கள் நலச் சங்கம் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழுவிடம் அளித்து, இதில் அடங்கிய பல கோரிக்கைகளை உடனே அறிவித்து, மீதத்தை பின்னர் அறிவிக்கலாம் என்று தெரிவித்தோம். அந்த அடிப்படையில் சிலவற்றை ஏற்று முதல்வர் அறிவித்துள்ளார்.

தேசிய அளவில் ஓய்வூதியம் மாதம் ரூபாய் 25,000 ஆக உயர்த்த வேண்டும் என்று நாங்கள் கேட்ட போதிலும், உடனடியாக அந்த தொகையை ரூபாய் 12,000யிலிருந்து 15,000 ஆக உயர்த்திய முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். பின்னர் இந்த தொகை 25000 ஆக உயர்த்தப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. மேலும், மருத்துவ காப்பீடு திட்டம், அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மட்டும் வழங்காமல் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறோம்.

அதேபோல், குறைந்தது 10 வருட அனுபவமுள்ள, அனைத்து பத்திரிகையாளர்களுக்கு (1500 பேருக்கு ) அடுக்கு மாடி வீடுகளை சென்னையில் அரசே கட்டி கொடுக்க வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறோம்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இல்லாமல், சென்னையின் மய்யபகுதியில் அடுக்குமாடி கட்டிடங்களைக் கட்டலாம். கொள்கை அளவில் வீட்டு வசதி திட்டத்திற்கு அரசு உதவிசெய்யும் என்று முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

மூத்த பத்திரிகையாளர்களுக்கு, குறைந்தது 25 ஆண்டு அனுபவம் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு Freelancer என்ற வகையில் 25 பேருக்கு அரசு அங்கீகார அட்டை வழங்க வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு ஆர்.ரெங்கராஜன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## ஒகேனக்கல் மூன்றாம் கட்ட குடிநீர்த் திட்டப் பணி!

# ரூ.2,283 கோடியை ஒன்றிய அரசு விடுவித்ததா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 15 -

ஒகேனக்கல் ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்டம் மூன்றாம் கட்ட பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் பங்கான ரூ.2,283 கோடியை தராமல் இருந்ததால், அத்திட்டம் மந்தகதியில் செயல்பட்டு வருகிறது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரம் மற்றும் தற்போதைய நிலை என்ன?

மேற்படி திட்டத்தை செயல்படுத்துவதற்கு நிலுவையில் உள்ள நிதியை விரைவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டங்களுக்கு நிதியளிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என மக்களவையில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் ஜல் சக்திக்கான ராஜாங்க அமைச்சர் வி.சோமன்னா எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ் வருமாறு: -

ஆகஸ்ட் 2019 முதல், இந்திய ஒன்றிய அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து, நாட்டின் ஒவ்வொரு கிராமப்புற வீடுகளுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான குழாய் நீர் இணைப்பை வழங்குவதற்காக, ஒன்றிய அரசின் ஜல் ஜீவன் மிஷன் (ஜேஜேஎம்) அனைத்து வீடுகளுக்கும் பைப் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

ஐந்தாண்டுகளுக்கு அதாவது 2019-2020 முதல் 2023 -2024 வரை JJMஐ செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது, இதன் போது மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்களைத் திட்டமிடுதல், ஒப்புதல், செயல்படுத்துதல் ஆகியவற்றை முடிக்க வேண்டும். JJM இன் கீழ் ஒன்றிய ஆதரவு பணி காலத்தில் பெறப்படும் நிதிக்கு மட்டுமே என்று மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான திட்ட அனுமதிக் குழு (SLSSC) ஜூன் 2023 இல், ஒகேனக்கல் நீர் வழங்கல் திட்டம், கட்டம்IIIக்கு ஒப்புதல் அளித்தது; இருப்பினும், பணி காலத்திற்குள் திட்டத்தை வழங்க முடியவில்லை.

நிதியமைச்சர் தனது 2025 -2026 பட்ஜெட் உரையின் போது JJM 2028 வரை நீட்டிக்கப்படுவதாக அறிவித்தார்.

குடிநீர் என்பது மாநில அரசின் அதிகார வரம்புக்குள் அங்கமாக இருப்பதால், குடிநீர் விநியோகத் திட்டங்களைத் திட்டமிட்டு, வடிவமைத்து, ஒப்புதல் அளித்து செயல்படுத்துவது மாநிலங்களே. இந்திய அரசு மாநில அரசின் முயற்சிகளுக்கு துணை புரிகிறது.

தொழில்நுட்பம், நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் மாநிலங்கள். எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக மாநிலங்கள் முழுவதும் பல்வேறு நிலைகளில் ஒரே நேரத்தில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மேலும், கிராமப்புற குடிநீர் வழங்கலுக்கான தனிப்பட்ட திட்டங்கள்/திட்டங்களின் திட்ட வாரியான விவரங்கள் மாநில அரசு மட்டத்தில் பராமரிக்கப்படுகின்றன.

பணிக் காலத்தில், வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற வீடுகளுக்கு குழாய் நீர் இணைப்புகளை வழங்குவதற்காக பல்வேறு கிராமப்புற குடிநீர் விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இந்திய அரசால் தமிழகத்திற்கு ரூ.5,899.53 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

---

# அதானே

**இ.**டி. இன்கம்டேக்ஸ் சிபிஐ இவற்றோடு
முப்படையை திரட்டிக் கொண்டு வந்தாலும்
சரி


இல்லை

அவற்றை எல்லாம் காட்டி
இன்னும் எஞ்சியுள்ள கட்சிகளை எல்லாம்
மிரட்டிக் கொண்டு வந்தாலும் சரி..

சித்திரைத்
திங்களில்


செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்

முதலமைச்சர்
இருக்கையில்
அமர்ந்து
ஒலிக்கப் போவது
என்னவோ




“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
என்னும் நான்”
என்னும்
அந்த கம்பீரக் குரல் தான்...

**என்ன நாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்